முருகப்பெருமான் துணை

**மகான் சுகப்பிரம்மர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**13.11.2022**, ஞாயிற்றுக்கிழமை

1. மாதவசியே கலியினில் பிறந்த
மாதரும ஞானியே அரங்கா
பூதலம் உன்னால் மாற்றம்
புண்ணிய வழி அடையுமெனக் கூறி
2. கூறியே சுபகிருது துலை திங்கள்
குறைவிலா இருபானேழ் திகதி கதிர்வாரம்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 27 ம் நாள் 13.11.2022 ஞாயிற்றுக்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசிதனை
தேசிகன் கேட்க சுகப்பிரம்மர் யானும்
3. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
உண்மைபட மக்களை காக்க
தானமாக வரங்களை வழங்கி
தருமம் அருளும் அரங்கன் திருவடி
4. திருவடி ஞானம் தரும் மலரடியாகும்
தெளிவு திடம் பக்குவம் தரும்
திருவடியாம் அரங்கன் குருவடி
தெய்வபலமாக மக்கள் அடைய
5. அடையவே மாற்றம் உண்டு
அனுகூலம் மிகுதியாகி இனிதே
தடைகள் அனைத்தும் விலகும்
தவபலமாக மாற்றம் காணும்
6. காணவே தன்னைச் சுற்றி
கருணை வேலிதனை அமைத்து
ஞானவழியை தடைகளின்றி
நம்பிக்கையோடு தொடர நேரும்
7. தொடரத் தொடர உலகமெங்கிலும்
தெரியவரும் மெய் ஞான வழி
இடரை வெல்லும் சக்தியென
யுகமக்களெல்லாம் உணர்ந்து தெளிந்து
8. தெளிந்து ஞானவான்கள் ஆகவே
தேசிகனால் தேற்றம் கண்டு
அழியாமை காணக் கூடும்
அரங்கன் தேடும் ஞானிகளாக
9. ஞானிகளாக உலகோர் தேறி
ஞானத்தலைமைகள் படைத்து
கனிவேலன் அருளாசிபடவே
கலியினில் ஞான ஆட்சி தர நேரும்

10. நேருமை நீதி குன்றா வண்ணம்
நிலவுலகம் மாற்றம் காண்கும்
வறுமை பசிபிணி கொடுமைகள்
வதைகள் அனைத்தும் விலகி

11. விலகியே உலகமாற்றம் தானும்
விரைந்து கண்டு மாற்றம்
கோலமதாய் ஞான சித்தர் காலம்
குவலயம் கண்டு பாதுகாப்பை பெறும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–